**மீன்பிடி வெகுமதி நிதியம் - 2020**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

மீன்பிடி வெகுமதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களினதும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1996 இன் 02 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான

அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத் தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெறப்பட வேண்டிய மீன்கள் விற்பனை வருமானம் | 2,354,295 | பட்டோலைகள் | கொவிட் நிலைமை காரணமாக வெகுமதி யாளர்கள் மற்றும் செலு த்த வேண்டிய தொகை களை நிச்சயிக்க முடி யாது போனமையால் | பெறப்பட வேண்டிய மீன்கள் விற்பனை வருமானம் தொடர் பான விபரமான பட்டோலைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | விபரமான பட்டோலை களை சமர்ப்பிக்க முடி யாதுள்ளது. | |
| (ஆ) | சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டிருந்த உத்தி யோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய படிகள் | 1,244,460 | பட்டோலைகள் | கொவிட் நிலைமை காரணமாக வெகுமதி யாளர்கள் மற்றும் செலு த்த வேண்டிய தொகை களை நிச்சயிக்க முடி யாது போனமையால் விபரமான பட்டோலை களை சமர்ப்பிக்க முடி யாதுள்ளது. | சுற்றிவளைப்புக்களி ல் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்க ளுக்குச் செலுத்த வேண்டிய படிகள் தொடர்பான விபர மான பட்டோலை கள் தயாரிக்கப்ப டுதல் வேண்டும். |
| (இ) | தற்போது எந்தளவு வழக்குகள் செயற் பாட்டில் உள்ளன என்றும் எந்தளவு வழக்குகள் செயற்ப டாதுள்ளன என்றும் முடிவாக்கப்பட்ட வழ க்குகள் தொடர்பில் வெகுமதி நிதியத் துக்கு கிடைக்க வேண்டிய தொகை கள் குறித்தும் உறுதியாக இனங் காணப்படக் கூடிய விதத்தில் உரியபடி நாளதுவரையாக்கப்ப ட்ட தகவல்கள் பேண ப்பட்டிருக்காமை. | - | உரியபடி நாள துவரையாக்கப்பட் ட அறிக்கைகள் | தற்போது காணப்படு கின்ற வழக்குகளுடன் தொடர்புடைய விபரங்க ளை உள்ளடக்கிய கோவைகள் பேணப்படு வதுடன், அதற்கமைய மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நீதிமன் றத்திலுள்ள வழக்குகள் முடிவடையும் வரை அந்த வழக்குகளை செயற்பாட்டில் உள்ள வழக்குகளாகவே அறிவி க்கப்பட வேண்டியுள் ளது. | வழக்குகள் தொட ர்பான சகல தகவ ல்களையும் உள் ளடக்கி நாளது வரையாக்கப்பட்ட அறிக்கைகள் பேண ப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 1,973,908 பெறப்பட வேண்டிய நிலுவை வருமானத்தில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்காமையால் நிலுவை வருமானங்களை அறவிடுவதில் நலிவான நிலைமை காணப்பட்டது. | 2013-2020 வரை பெற வேண்டிய வருமானம் குறித்த காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வருமானங் களை துரிதமாக அறவிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1996 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல்வள சட்டம் | | | |
| | 49(5) ஆம் பிரிவு | • சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் சம்பந்தமான அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | வழக்குகள் சம்பந்தமான அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், நீதிமன்றங்களிலிருந்து அந்த அறிக்கைகளை பெற்றுக் கொள்வது நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது. | குறித்த வழக்கு அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | • சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2014 முதல் 2020 வரை 3001 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும், 2014, 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்காக எவ்வித வெகுமதியும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கு அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம், உத்தியோகத்தர்கள் வவுச்சர்களை சமர்ப்பிப்பதில் தாமதம் போன்றன காரணமாக வெகுமதியினை செலுத்துவதற்கு தாமதமேற்படுவதுடன், வெகுமதித் தொகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகின்ற போதிலும், ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்கின்ற சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளமையால் உத்தியோகத்தர்களின் பின்னடைவு ஏற்பட்டிருக்கவில்லை. | சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளை தாமதமின்றி வழங்குவதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமணாங்கள் 133(1) மற்றும் 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்காக வெகுமதி நிதியம் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில | கொவிட் நிலைமை காரணமாக எதிர்பார்த்தவாறு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடிந்திருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும். | நிதியம் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 798,616 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,986,601 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,187,985 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் குறைவடைந்திருந்தமையே இந்த பின்னடைவுக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| வருமானப் போக்கு | 2020 | 2019 | சதவீத மாற்றம் | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % | |
| அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் | 2,039,667 | 9,534,248 | 78.6 | சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் குறைவடைந்திருந்தமை |
| சுற்றிவளைப்புகளில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு படிகளை செலுத்துதல் | 1,241,051 | 4,547,648 | 72.7 | முடிவடைந்த வழக்குகளிற்குரிய அறிக்கைகளைப் பெற்று வெகுமதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 8,612,255 காசு மீதியானது வெகுமதியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் அரசாங்கப் பங்களிப்பு என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்ற போதிலும், செலுத்த வேண்டிய படிகளாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,244,460 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, எஞ்சிய ரூபா 7,367,795 தொகைக்கு உரித்துடைய வெகுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க வருமானம் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். கொவிட் நிலைமை காரணமாக வெகுமதி பட்டியலைத் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமா கவே இந்த நிலை ஏற்பட் டுள்ளதுடன், 2021 இல் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் சுற்றிவளைப்புகளிற்குரிய படிகள் செலுத்தப்பட்ட பின்னர் எஞ்சிய தொகையினை அரசாங் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்துடைய வெகுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசாங்க வருமானம் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் புலனாய்வுப் பிரிவு மற்றும் 15 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களின் ஊடாக 536 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்த போதிலும், 3 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களிலிருந்து மாத்திரம் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் வெகுமதி நிதியத்துக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய மாவட்ட மீன்பிடி அலுவலகங்களிலிருந்து வெகுமதி நிதியத்துக்கு வருமானம் கிடைத்திருக்காமை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | வழக்கு நடவடிக்கைகள் முடிந்திருக்கமையே இதற்கான காரணமாகும் என்பதுடன் நீதி மன்ற நடவடிக்கைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதல்ல என்பதனால் தாமதத்திற்கு திணைக்களம் பொறுப்பாகாது. | வழக்குகளுடன் தொடர்புடைய அறிக்கைகளை முறையாக பேணுவதற்கும் பணத்தை வரவழைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவு மற்றும் 15 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களிற்காக திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததுடன், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த சுற்றவளைப்புகளின் செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியவில்லை. | கொவிட் நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாது போயிருந்தமையால் செயன்முன்னேற்றம் குறைவாகவே காணப்பட்டது. | மேற்கொள்ளக் கூடிய விதத்தில் திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை, மேற்கொண்டிருந்த சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை ஆகிய தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். |